**வில்கமுவ பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 11 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கின் மீதிகளுக்கிடையில் ரூபா. 1,471,340 வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 182,275 பெறுமதியான 8 பொருள் உருப்படிகள் நிலையான சொத்துக்களாக இனங்காணப்படாது செலவுகளாக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிலையான சொத்துக் கணக்கு அப்பொறுமானத்தினால் குறைத்தும் செயற்பாட்டுச் செலவுகள் அப் பொறுமானத்தினால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) ஹெட்டிபொல பொது மலசலகூட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 300,000 நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017ஆம் ஆண்டில் எழுதுகருவிகள் கொள்வனவிற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 109,590 தொகை 2017 ஆம் ஆண்டில் கடன்கொடுத்தோர் கணக்கின் கீழ் காட்டப்படாதிருந்ததுடன் குறித்த பொருட்கள் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்தன.

(உ) வில்கமுவ மக்கள் வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த 03 நிலையான வைப்புகளுக்காக 2017 ஆம் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா. 86,237 ஆக இருந்த போதும் அது ரூபா. 130,849 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக வட்டி வருமானம் மற்றும் வருடாந்த மிகை ரூபா. 44,612 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 33,926,681 கூட்டுத்தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுடனும் ஒப்பீடு செய்த போது அவதானிக்கப்பட்ட அசாதாரணங்களின் பெறுமதி ரூபா 559,743 கூட்டுத்தொகையாக இருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டின் இறுதியில் ரூபா 760,894 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதிக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,829,878 செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதி மீதி ரூபா 3,068,983 ஆக இருந்ததுடன் வருடக் கணக்காக இருந்து தொடர்ச்சியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டு தொங்கல் கணக்கின் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமுராது முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 910,704 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளைத் தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்ய கணக்குகள்**

நிலுவையாகவிருந்த மூலதன உதவிகளான ரூபா 2,383,801 ஆகிய செலவு மீதி நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் இக்கணக்கு மீதிகளை இனங்கண்டு சீராக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 69,370,711 தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவு | | சபையினால் நிர்மாணிக்கபட்ட வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிக்கோவை | | |
| i. 178(2)(2)(உ) ஆம் பிரிவு | 52,950 | கொள்வனவிற்காக விலை விபரங்கள் கோரும் போது உரிய விதந்துரைகள் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் விதந்துரைகள் குறிப்பிடப்படாமல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| ii. | 217 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான சபையால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள தொடர்பாக பீஎல் 46 இன் பிரகாரம் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அச்சட்டத்தின் கீழ் பிரமாணங்களுக்கு இணங்க 1523/16 ஆம் இலக்க 2008 இன் சனவரி 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் ‘‘ஈ’’ பகுதி | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய உலர்ந்த செயற்பாடுடன் கூடிய 15 நெல் ஆலை, தானிய அரைக்கும் ஆலைகள் மற்றும் 08 கொங்கிரீட் வேலைத்தளங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படா திருந்ததுடன் உரிய கைத்தொழில்கள் நடாத்திச் செல்லப்பட்டு வருகின்றன. |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சகல அரச நிறுவனங்களிலும் கைவிரலடையாளம் பதியும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்துவது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையின் பிரகாரம் பிரதேச சபையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,323,775 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,553,766 ,ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

|  | 2017 |  |  |  | 2016 |  |  |  |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|  | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 745,000 | 637,907 | 483,299 | 154,608 | 745,000 | 637,000 | 760,704 | - |
| வாடகை | 3,025,000 | 1,764,664 | 2,434,076 | - | 1,985,000 | 1,449,600 | 2,165,386 | - |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,435,000 | 671,959 | 1,201,090 | - | 1,410,000 | 815,355 | 1,276,335 | - |
| ஏனைய வருமானம் | 8,251,000 | 1,856,037 | 3,876,449 | - | 10,132,000 | 1,877,332 | 3,576,602 | - |
| மொத்தம் | 13,456,000 | 4,930,567 | 7,994,914 | 154,608 | 14,272,000 | 4,779,287 | 7,779,027 | - |

## 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையினால் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 13,925,162 ஆன வேறு வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,763,817 வரை ரூபா 1,161,345 ஆல் அதாவது 8% இனால் குறைவடைந்திருந்தது.

## 2.2.3 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 302,737 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 637,907 ஆக இருந்தது. 2017 ஆண்டிற்காக 73 சதவீதமான ரூபா 467,483 மாத்திரமே கிடைத்திருந்தமையால் வீதவரி அறவீட்டில் பலவீனமான செயன்முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வீதவரி ஆதனங்கள் புதிதாக மதிபபீட்டிற்கு உட்படுத்தி சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களிலிருந்து வீதவரி கட்டணங்களாக ரூபா 118,943 தொகை 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 குத்தகை வாடகை

வருடக் கணக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை இறைச்சிக் கடை வாடகை ரூபா 236,253 தொகையும் நிலுவை கடை வாடகை ரூபா 660,816 தொகையும் கடல் மீன் கடை வாடகை ரூபா 3,000 உமாக ரூபா 900,069 கூட்டுத்தொகையான வாடகை பெறுமதியொன்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

-----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் காணப்படும் இடங்கள் இனங்காணப்படாதிருந்ததுடன் அத்தரிப்பிடங்கள் காணப்படும் இடங்களின் உரிமையினை சபை பெற்றுக்கொள்ளாததன் காரணமாக அவ்விடங்களிலிருந்து கட்டணங்களை ் அறவிட முடியாது இருந்துள்ளது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களை இனங்கண்டு வருடாந்தக் கட்டணங்களை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணமாக ரூபா 898,385 அறவிடப்பட வேண்டியிருந்தன.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களிலிருந்து வீதவரி 2008 ஆண்டு முதல் ரூபா 50,429 ஆன நிலுவை நீர்க் கட்டணமாக ரூபா அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

---------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,654,882 உம் முத்திரை கட்டணம் ரூபா 28,400 ஆக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

----------------------------------------

**3.1 செயலாற்றல்**

-----------------------

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

-----------------------

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 18 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

2014 பெப்ரவரி 02 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், திட்டமிடப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் திட்டம், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அச்செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் என்பவற்றை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட

வேண்டிய போதிலும் அவ்வாறான செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டில் திண்மக் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக சம்பளம் உட்பட ஏனைய செலவினங்களாக ரூபா 2,792,977 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 1 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகள் வகைப்படுத்தப்படாது சேகரித்து அரச காணியில் இடப்பட்டு வந்தன.

**(ஈ) சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள்**

பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேர்கின்ற பொலிதீன் கழிவுகளை ஒன்று சேர்க்கின்ற அதே இடத்திலேயே குழியைத் தோண்டி அவற்றை தீயிட்டுக் கொழுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் பெருந்தொகையான பொலிதீன்கள் அவ்விடத்திலே குவிந்து காணப்படுவதும் மிருகங்களால் அவை உட்கொள்ளப்படுவதும் அவதானிக்கப்பட்டது. பொலிதீன் மற்றும் உக்கக்கூடிய கழிவுகளை வேறாக்காது ஒன்றுசேர்த்து ஒரே இடத்தில் கொட்டுவதனால் சுற்றுச் சூழல் மாசடைந்திருந்த அதே வேளை திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பிலான ஒரு நீண்டகாலத் திட்டத்திற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சகல நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபை தொடர்பாக போதியளவு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தினூடாக செயற்படுத்துவதற்கு போதுமான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பிரதேச சபைக்கு சொந்தமான 05 வாகனங்களுக்காக வாகன அனுமதிப்பத்திரங்கள் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்படாமை காரணமாக 2013 மற்றும் 2017 ஆண்டுகளின் போது ரூபா 9,470 தண்டப்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் மிகை மற்றும் வெற்றிடங்கள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையின் பதவியணியினர் வெற்றிடங்கள் 19 காணப்பட்டதுடன் இவ்வெற்றிடங்கள் 15 இல் 13 இரண்டாம் தரமட்ட பதவியணியினராக இருந்தமையால் சபையின் நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதில் சிக்கலான நிலைமையொன்று இருப்பதாக அவதானிக்கப்பட்டது.

**(ஆ) ஊழியர் கடன்**

2006 ஆம் ஆண்டு முதல் சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற, மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 7 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 91,141 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான ஹெட்டிபொல னகரத்திலுள்ள பொதுக் மலசலகூடம் பிரதேச சபையினால் அல்லது ஊழியர் ஒருவரை நியமித்து பொது மக்கள் பாவனைக்காக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பராமரித்தல் வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதன் காரணமாக சபைக்கான வருமானம் ஈட்டும் வழிமுறையொன்று கிடைக்காமல் போயுள்ளதுடன் மீளாய்வாண்டில் மாகாண நிரந்தர அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 300,000 செலவில் இம்மலசலகூடம் அபிவிருத்தி செய்யப்பட்ட போதும் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் இவ்விடத்தை பராமரிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி மன்றங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் மூலதன வேலைத்திட்டம் 2016 இன் கீழ் ஹெட்டிபொல பொது நூலகத்தின் அருகில் ரூபா800,000 பெறுமதியான 4 நடமாடும் விற்பனை நிலையங்களை அமைத்து 2016 நவம்பர் 17 ஆம் திகதி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இவ்விற்பனை நிலையங்களை முறையாக பகிந்தள்ளப்பதன் மூலம் வருமானம் ஈட்டல் மற்றும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பாவிக்கப்படாததன் காரணமாக இவ்வியாபார நிலையங்கள் அழிவுக்குள்ளாகியிருந்தன.

(இ) பொருள் மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்ட வகையில் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட 01 அங்குல 258 கல்வனைஸ் ஜீ.ஐ குழாய்களில் 36 பற்றாக்குறையாக இருக்கையில் அவற்றின் ஒரு பகுதி பாதுகாப்பற்ற வகையில் சபை வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) முறையான வகையில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படாதிருந்தமையால் நீர் மற்றும் மின் களஞ்சியங்கள் பௌதீக ரீதியாக பரீட்சிப்பது சிரமமாக இருந்தன.

(உ) அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற 27 கட்டிட விண்ணப்பங்களுக்காக அனுமதி பெற்றுக் கொடுத்திருந்த போதிலும், எந்தவொரு கட்டிடத்திற்காகவும் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 45,148,811 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வில்கமுவ பிரதேச சபை நீர் செயற்திட்டத்தின் மூலம் 650 பாவனையாளர்களுக்கு மாத்திரம் நீர் வழங்கப்பட்டிருந்ததுடன் நீர் செயற்திட்டத்தின் நீர் மூலவளங்களிலிருந்து கிடைக்கும் நீர் போதியளவில் இல்லாமை மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக சகல நீர் பாவனையாளர்களினதும் தேவையை நிறைவேற்ற முடியாமல் இருந்ததுடன் இதன் காரணமாக சபையின் நீர் பௌசர் பயன்படுத்தப்பட்டு மேலதிக கிரயமொன்றை மேற்கொண்டு நீரை பகிர்ந்தளிக்க நேர்ந்திருந்தது. காணப்படும் நீர் செயற்திட்டங்களில்

நீர் இயலளவினை அதிகரிக்க கூடிய புதிய நீர் மூலங்களை இனங்காண்பதற்கும் காணப்படும் தொழில்நுட்ப சிக்கல்களை சீராக்குவதற்கும் சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) பிரதேச சிறார்களின் கணினி திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ''e'' அறிவு மையம் 2017 ஆம் ஆண்டில் மாணவர்கள் இல்லாததன் காரணமாக மூடப்பட்டிருந்தது. நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் பொருத்தமான வளவாளர்களை இணைத்துக் கொள்வதன் மூலமும் இந் நிறுவனத்தினை தொடர்ந்தும் நடாத்திச் செல்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) புறநெகும திட்டத்தின் கீழ் ரூபா. 15,419,920 ஒப்பந்தப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு வில்கமுவ பிரதேச சபைக்கு 2016 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த நாமினிஓய பிண தகனகூடத்தில் 6 சடலங்கள் மாத்திரம் தகனம் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 04 ஆம் திகதியின் பின்னர் தகனக்கூட நடவடிக்கைகள் செயற்படாதிருந்தது. தகணகூடத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தொடர்பான பொறுப்பினை உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக செயற்படாத வேலைகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது சிக்கலாக இருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03-10 ஆண் காலப்பகுதிக்குரிய 05 வாகனங்கள் திருத்தியமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.5.2 வாகனப் பயன்பாடு

சபைக்குச் சொந்தமான ரூபா 5,600,000 பெறுமதியுடன் கூடிய லொரி வண்டி 2016 மே 06 ஆந் திகதியின் பின்னர் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் இருந்ததுடன் இவ்வாகனத்தை பொருத்தமான வகையில் வருமானம் உழைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

2006 பெறுகை வழிகாட்டியின் 4.2.1 இன் பிரகாரம் பிரதேச சபையினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,095,020 ஆன கொள்வனவு பெறுகை திட்டமொன்றில்லாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையே நிதிஏற்பாடு மாற்றப்பட்ட பின்னரும், பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையில் கணிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக்

கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 11 வருமான விடயங்களுக்குரிய ரூபா 790,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 29 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையில் 0 சதவீதம் முதல் 305 சதவீதம் இடைப்பட்ட விலகல்கள் காணப்பட்டன.

(இ) 79 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,657,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 25 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 10 சதவீதம் முதல் 100 சதவீதம் இடையில் விலகல் காணப்பட்டன

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய சீபீசீ/சீஎம்சீ/1/6 ஆம் இலக்க மத்திய மாகாண பிரதான செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டில் 03 கூட்டத் தொடர்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்தொடரும் நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் | i. சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை.<br>ii. சகல சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமை.<br>iii. விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.<br>iv. வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான சேகரிப்பு | i. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | ii. | வியாபார அனுமதிப்பத்தில் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை |
| | | iii. | தற்காலிக வீதவரி கட்டணங்களை அறவிடப்படாமை |
| | | iv. | உப விதிகளை பிறப்பித்து முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | i | களஞ்சிய இருப்பு பதிவேடு நாளாது வரையாக்கப்பட்டன |
| | பாதீட்டுக் கட்டுப்பாடு | ii | காலாவதியான சொத்துக்களை அகற்ற நடடிக்கை எடுக்கப்படாமை |
| | | iii | தேவையற்ற இருப்புக்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தமை |
| (ஈ) | ஒப்பந்த நிருவாகம் | i | சாத்திய வள சமர்ப்பிக்கப்படாமை |
| | | ii | ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அந்நிர்மாண வேலைகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதைப் பரீட்சிக்காமை |